# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## O.S.No.15/2021

PW1- காமராஜ் நாள்: 03.04.2025

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

அகிலாண்டேஸ்வரிக்கு திருஞானம் என்பவர் பாதுகாவலர் என்று வழக்குரையில் நான் போட்டுள்ளதர்க்கு காரணம் என்ன என்றால் அவர் தான் ஜாமீனாக வருவார். பாதுகாவலர் என்றால் என்ன அர்த்தம் என்று எனக்கு தெரியாது. அகிலாண்டேஸ்வரிக்கு திருஞானம் ஜாமீனாக வருவார் என்று நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சித்தளி கிராமத்தில் என் வீட்டில் வைத்து தான் வா.சா.ஆ.6 ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. வா.சா.ஆ-4 கிரைய பத்திரத்திரம் தாக்கல் செய்ததை பற்றி என் வழக்கறிஞரை தான் கேட்க வேண்டும். நான் தாக்கல் செய்துள்ள கிரைய பத்திரத்தில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேனா என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 வழக்கறிஞர் அறிவிப்பு நான் அனுப்பியது தான். அந்த அறிவிப்பை அகிலாண்டேஸ்வரி , திருஞானமும் பெற்றுக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. வாலிகண்டபுரம் சார்பதிவாளர்அலுவலகத்தில் அகிலாண்டேஸ்வரி வருவார் என்று காத்திருந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் 10 கோடி பெறுமா என்றால் ஒப்பந்தத்திலுள்ள மதிப்பு தான் பெறும். நான் சொல்வது தவறு என்றும் அந்த இடம் 10 கோடி பெறும் என்றும் , அந்த இடத்தை வாங்குவதற்காக நிறைய பேர் போட்டிபோட்டுக் கொண்டு வந்தார்கள் என்றும் அதில் நானும் ஒருவர் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை குறைந்த விலைக்கு ரூ.4 கோடிக்கு கேட்டு அகிலாண்டேஸ்வரி மறுத்துவிட்டார் என்றால் சரியல்ல. குறைந்த விலையில் கிடைக்கவில்லை என்பதால் வா.சா.ஆ.6 ஆவணம் போலியாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சகலையின் உதவியுடன் போலியாக ஆவணம் தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணம் பொய்யானது என்றும், போர்ஜரியாக தயார் செய்யப்பட்டது என்றும் அகிலாண்டேஸ்வரி அதில் கையெழுத்து போடவில்லை என்றும், திருஞானம் சாட்சி கையெழுத்து போடவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் இரண்டு தடவை பத்திரம் எழுதி கொடுக்க சொல்லி கேட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவாப்படி

எந்தவித பரிகாரமும் கிடைக்க கூடியது அல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதி எந்தவித தொகையையும் பெற்றுக்கொள்ளவில்லை என்றும், அவர் எனக்கு கிரைய பத்திரம் எழுதிக்கொடுக்க வேண்டிய அவசியம், இல்லை என்றும் அந்த ஒப்பந்த பத்திரம் செல்லத்தக்கதல்ல என்றும், சொன்னால் சரியல்ல. தாவா தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge
Perambalur.